# பொன்னீலன் நாவல்களில் சமுதாய சீர்திருத்தவாதிகள்

# Social Reformers in Ponneelan's Novel

***முனைவர் மு. அனுசுயா தேவி***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அரசு கலைக் கல்லூரி, சேலம்

**Dr. M. Anusuya Devi**
*Assistant Professor in Tamil*
*Government Arts College, Salem*

**ஆய்வுச் சுருக்கம்**

*சமுதாயம் மக்களால் ஆனது. கூட்டு இயக்கமாக இயங்கி வரும் மக்களின் நிலை சமுதாய காரணிகளால் சில மாற்றங்களுக்கு உள்ளாகி வேறுபாட்டை ஏற்படுத்திவிடுகின்றன. அவ்வேறுபாடுகள் மக்களைத் தீவிரமாகத் துன்புறுத்தத் தொடங்கிய காலத்தில் சமுதாய சீர்திருத்தவாதிகளால் அச்சிக்கல் ஒரு முடிவை எட்டுகின்றது. அத்தகைய சமுதாய வரலாற்றுச் சிக்கல்கள் படைப்பாளர்தம் பாடுபொருளாகின்றன. எழுத்தாளர் பொன்னீலன் அவர்கள் மார்க்ஸிய எழுத்தாளர். எனவே அவரது படைப்புகளில் சமுதாய சிக்கல்கள், அதன் காரணிகள், சீர்திருத்தவாதிகள், சமுதாயப் போராட்டங்கள் இவை பெரும்பாலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. சமுதாயப் போராட் டங்களை மையமிட்டு அவர் எழுதும் போது அப்போராட்டத் தில் ஈடுபட்டு மக்களை வழிநடத்தி வெற்றி பெறச் செய்த சமுதாயப் போராளிகள் பாத்திரங்களாகவே இடம் பெற்றுள்ளனர். இதனால் அப்போராட்டத்தின் உண்மை நிலை எத்தனையோ நூற்றாண்டு கள் கடந்தும் மக்களை வந்தடைகின்றது. இப்போக்கு படைப்பாளனின் படைப்பு நீதியாக உணரப்பட்டு படைப்பு வெற்றியாகப் படைப்பாளனை அடையாளப்படுத்துகின்றது. இந்நிலையை பொன்னீலனின் பிச்சிப்பு நாவல் கொண்டு உணர்த்துவது இக்கட்டுரையின் நோக்காகவும் போக்காகவும் அமைகின்றது.*

***முக்கியச் சொற்கள்:***

*மீட் ஐயர், மார்சுல் நேசமணி, ஐயா வைகுண்டர், தோள் சீலைப்போராட்டம், சமுதாய ஏற்றத்தாழ்வு, சமுதாய சீர்திருத்தம்*

**Abstract**

*Society is made up of people. Due to some social factors the Status of people differ from person to person. When those differences were begin to persecute the people, social reformers raise and guide the people how to control the inequality. Novelist Ponneelan shows the social reformers in his Novel namely 'Pichi Poo'. The social reformers are Mr.Meet Iyer, Marshal Nesamani, Aiya Vaigundar. They act one of the character of the novel and shows how they guide people to fight against social inequality in the novel. So their social war known by the future generation. This is also the writer's justice and the victory of him. This article proves the writer's justice from Ponneelan's Novel namely 'Pichi Poo'.*

***Keywords:***

*Meet Iyer, Marshal Nesamani, Aiya vaigundar, Social Inequality, Thoal Seelai Poratam.*

**Citation**

Anusuya Devi, M. “Social Reformers in Ponneelan’s Novel.” *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 3, 2022, pp. 32–40.

| | |
|---|---|
| CC BY SA | *https://doi.org/10.5281/zenodo.20327548* |

**முன்னுரை**

*படைப்பாளர் பொன்னீலன் அவர்கள் சமுதாயத்தில் நிலவிய ஏற்றத்தாழ்வுகளை களைவதையும் களைவதற்காகப் போராடிய போராளிகளை அடையாளப்படுத்துவதிலும் தனக்கென தனித்த போக்கினைக் கொண்டவர். அவ்வாறு அவர் கண்ட போராளிகளைத் தனது படைப்புகளில் பாத்திரங்களாக உலவ விடுவது அவரது வழக்கம். அவ்வாறு அவர் படைத்த பிச்சிப்பு நாவலில் பதிவான சமுதாய சீர்திருத்தவாதிகளான மீட்ஐயர், மார்சுல் நேசமணி, ஐயா வைகுண்டர் ஆகிய சமுதாயப் போராளிகளின் போராட்டங்களைச் சுட்ட வேண்டிய இடங்களில் அவர்களையே உண்மைப் பாத்திரங்களாக்கி கதையை அமைத்துள்ளார். அதன் வழி அறியலாகும் வரலாற்றுச் செய்திகளைப் பதிவு செய்யும் முயற்சியில் தேன்றியதே இக்கட்டுரை*

**மீட் ஐயர்**

*இந்தியர்களை ஆண்ட அந்நியர்களில் இந்தியர் உரிமைக்காகப் போராடியோருள் மீட் ஐயரும் ஒருவர். கிறித்துவ மிசுனரியின் சார்பில் அருட்பணியாளராகப் பணி செய்யும் நோக்கத்தில் 1818-ஆம் ஆண்டு லண்டன் நகரிலிருந்து நாகர்கோவிலுக்கு வந்தார். அவ்வாறு அவர் இந்தியாவிற்கு வந்த காலகட்டத்தில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தோர் மேலாடை அணியக்கூடாது என்ற சட்டம் வழக்கிலிருந்தது. அதை எதிர்த்து மீட் ஐயர் மக்களுக்காகப் போராடினார். அவரது போராட்டம் நீதிமன்றம் வரை சென்றது. நீதிமன்றத் தீர்ப்பில் கிறித்துவ மதத்திற்கு மாறிய பெண்கள் மட்டும் குப்பாயம் எனப்படும் மேலாடை அணியலாம் என்ற நீ திமன்றத் தீர்ப்பை எதிர்த்துத் தாழ்த்தப்பட்ட தமிழகப் பெண்களுக்காகக் குரல் கொடுத்தவர். இவரைப் பொன்னீலன் தனது நாலல்களில் ஒரு பாத்திரமாக ஊடாடச் செய்துள்ளார்.*

**மீட் ஐயரின் சமுதாயப் புரட்சி**

*படைப்பாளர் பொன்னீலனின் படைப்புகளான பிச்சிப்பு, மறுபக்கம் ஆகிய நாவல்களில் மீட் ஐயர் ஒரு பாத்திரமாகக் காட்டப்பட்டுள்ளார். திரு.மீட் ஐயர் அவர்கள் 1830-களில் தமிழ்நாட்டில் நடைபெற்ற "தோள் சீலைப்போராட்டம்" "மேலாடைக்கலகம் என்றெல்லாம் அழைக்கப்பெற்ற மிகப்பெரிய கழகத்திற்கு அடிப்படை வித்திட்டவர். தமிழ்நாட்டில் தலைவிரித்தாடிய சாதி வெறியின் அடிப்படையில் தாழ்த்தப்பட்ட இனம் என்று அடையாளப்பட்ட இனத்துப் பெண்கள் மார்பில் சீலை அணியலாம் என்னும் தீர்ப்பைப் பெற்றுத் தந்து தமிழ்நாட்டுப் பெண்களின் மானத்தைக் காத்தவர். எனவே தமிழக மக்களால் 'சுதென் திருவிதாங்கூரின் தந்தைசுசு என்று அழைக்கப்படுகிறார்.*

**மீட் ஐயரின் கலவிப்பணி**

*திரு.மீட் ஐயர் அவர்கள் அருட்பணியாளராகப் பணி செய்யும் நோக்கத்தில் இந்தியா வந்தவர். அவரது பணியில் நிறைவு கொண்ட ஆங்கிலேய அரசு 1818-ஆம் ஆண்டு இங்கிலாந்து மகாராணியின் இசைவுடன் நீதிபதியாகப் பணியமர்த்தியது. அருட்பணியாளராக இருந்து கொண்டு நீதிபதியாகப் பணியாற்றுவதை விரும்பாத திரு.மீட் ஐயர் அவர்கள் அதனை ராஜினாமா செய்துவிட்டு நாகர்கோவிலில் மிசுனால் நடத்தப்பெற்ற ஆரம்பப் பள்ளிக்கூடத்தை எடுத்து நடத்தினார். பெண்களுக்குத் தங்கும் விடுதி அமைப்பதிலும் அக்கறை காட்டினார். ஆங்கில பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர் பதவியில் அமர்த்தப்பட்டார். அப்பதவியைக் கொண்டு மாணவ மாணவிகளுக்குப் பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தினார். அவரது*

*மேற்பார்வையில் இருந்த பள்ளிகளில் அவர் காட்டிய அக்கறையும் செயல்படுத்திய நல்ல திட்டங்களும் பொன்னீலனின் நாவல்களில் கதை நிகழ்வுகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

**பிச்சிப்பூ புதினத்தில் மீட் ஐயரின் பங்காற்றல்**

*பொன்னீலனின் பிச்சிப்பூ நாவலில் திரு.மீட் ஐயர் ஒரு துணைமைப் பாத்திரமாகக் காட்டப்பட்டுள்ளார். பிச்சிப்பூ புதினத்தின் கதைத்தலைவன் முர்த்தியார். அவரது மூத்த சகோதரன் பெரிய நீலன் கிறித்துவ மதத்தைச் சார்கிறான். பேரின்பன் என்று பெயர் மாற்றம் செய்யப்படுகிறான். கிறித்துவ மிசுனரியால் கல்வி உதவி அளிக்கப்பட்டு தமிழகத்தின் உயர் அதிகாரியாக உயர்கிறான். அவனது மகன் சத்திய நேசனும் கல்வியில் சிறந்து விளங்குகிறான். அவனது படிப்பிற்கான வழிகாட்டியாகவும் நல்ல ஊக்கப்படுத்தியாகவும் திரு.மீட் ஐயர் காட்டப்பட்டுள்ளார். இதனை*

*“நீ சட்டம் படி. பத்து வருசம் கோர்ட்ல வக்கீலா வேலை பாரு. உன்னைய ஜட்ஜ் ஆக்குறது என் பொறுப்பு என்னாரு மீட் ஐயர்”*

*என்னும் வரிகள் புலப்படுத்துகின்றன.*

**தாழ்த்தப்பட்டோருக்கான கல்வி**

*திரு.மீட் ஐயர் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த குழந்தைகளுக்குக் கல்வி மறுக்கப்பட்ட சூழலில் பள்ளிக்கூடங்களுக்கெல்லாம் தலைமைக் கண்காணிப்பாளராகப் பணியமர்த்தப்படுகிறார். அப்பணி வாய்ப்பைப் பயன்படுத்தி அவர்களுக்கு நல்லதொரு கல்வியையும் சமுதாய அடையாளத்தையும் உருவாக்கித்தர விரும்புகிறார். பள்ளிக்கூடத்திற்கு ஆடையின்றியும் உடல் சுத்தமின்றியும் வரும் குழந்தைகளுக்குத் தன் சொந்தச் செலவில் உடை வாங்கிக் கொடுத்துப் பராமரிக்கிறார். தாயும் தந்தையும் அனாதைச் சந்தையில் விற்கப்பட்ட நிலையில் அனாதையாகி நின்ற குழந்தையைத் தனது விடுதியில் சேர்க்கிறார். அதனால் ஏனைய சாதிக்குழந்தைகள் விடுதியிலிருந்து விலகுகின்றனர். அதனால் அனைவருக்கும் கல்வி கிடைக்க வேண்டும் என்றெண்ணி ஒவ்வொரு சாதிக்கும் தனித்தனியாக விடுதி கட்டுகிறார்.*

**பள்ளியாடி நேசமணி பற்றிய பதிவு**

*பொன்னீலனின் படைப்புகளில் பதிவாகியுள்ள வரலாறு படைத்த ஆன்றோர்களுள் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த “கன்னியாகுமரி மாவட்டத்தின் தந்தை” என அழைக்கப்பட்ட பள்ளியாடி நேசமணியும் ஒருவர். இவர் அம்மாவட்டத்தின் பள்ளியாடி என்னும் ஊரில் பிறந்தவர். வழக்கறிஞராகவும் அரசியல்வாதியாகவும் பணியாற்றியவர். குமரி மாவட்டத்தைத் தமிழ்நாட்டுடன் இணைப்பதற்காக நடத்திய போராட்டங்களுக்குத் தலைமை தாங்கி வழிநடத்தியவர். எனவே குமரி மாவட்டத்து மக்கள் இவரது சேவையைப் பாராட்டி “குமரித்தந்தை” என்று அழைக்கின்றனர். குமரி மாவட்டத்தில் நாயர் இனத்தைச் சார்ந்தோர் செய்த அடக்குமுறையை சிறுவயது முதல் அனுபவித்தவர். எனவே இளம் வயதிலிருந்தே ஏழைகளின் மேன்மைக்காகப் பாடுபட்டவர். வழக்கறிஞராகத் தேர்ச்சி பெற்று 1921-ஆம் ஆண்டு முதல் நாகர்கோவில் நீதிமன்றத்தில் பணி செய்தார். அக்காலத்தில் வழக்கறிஞர்கள் உட்காருவதற்கு சாதி ரீதியாக வேறுபட்ட இருக்கைகளை வழங்கினர். தனித்தனியாகக் குடிநீர்ப்பானை இருந்தது. இவ்விரண்டு வழக்கத்தையும் மாற்றி அமைத்தார். பின்னர் தமது வாழ்நாள் முழுவதும் நாகர்கோவில் நாடாளுமன்ற உறுப்பினராகச் செயலாற்றினார். திரு.மார்சல் நேசமணி அவர்களும் பொன்னீலனின் படைப்பான “பிச்சிப்பு” நாவலில் ஒரு பாத்திரமாகக் காட்டப்பட்டுள்ளார்.*

**பொன்னீலன் நாவலில் மார்சுல் நேசமணி**

*மார்சுல் நேசமணி, பள்ளியாடி நேசமணி என்றெல்லாம் அழைக்கப்படும் திரு.நேசமணி அவர்கள் பிச்சிப்பு நாவலில் வழக்கறிஞர் பாத்திரத்தில் இடம்பெற்றுள்ளார். அக்காலத்தில் நிலவிய சாதீய ரீதியான அடக்குமுறைகளை எதிர்த்தவர். அவ் அடக்குமுறைகளுக்கு ஆளாகிய மக்கள் விழிப்புணர்வு கொள்ள வழிகாட்டியவர். அனைத்து மக்களும் சமமே என்னும் வழக்கம் நடைமுறைப்படுத்தப்பட வீரியமாகப் போராடியவர். அவர் பிச்சிப்பூ நாவலில் சத்தியநேசன் வழக்கறிஞராக மார்சுல் நேசமணி அவர்களிடம் பயிற்சி பெற்றதாகப் பொன்னீலன் அவர்கள் பிச்சிப்பூ நாவலில் காட்டியுள்ளார்.*

*நாகர்கோவில் நீதிமன்றத்தில் வழக்காடுமிடத்து நடைமுறைகளான நான்கு வர்ணத்தார்க்கும் வேறுபாடு காட்டும் விதத்தில் இடப்பட்ட இருக்கைகளை எதிர்த்து உயர் சாதியினர் என்று அடையாளப்படுத்தப்பட்டோருக்கான இருக்கையில் அமர்ந்து தனது எதிர்ப்பைப் பலமாகக் காட்டியவர்.*

*அந்தக் காலத்தில் உயர் சாதியினரைத் தாழ்த்தப்பட்ட இனத்தார் "எஜமான்" என்று அழைக்கும் வழக்கத்தையும் இல்லாமலாக்க முயன்றவர்.*

*பாலையா என்பவனின் நிலத்திற்கு ஆசைப்பட்ட குட்டப்பா என்பவன் அவனது நிலத்தை அபகரிக்கிறான். அதனால் கோபமுற்ற பாலையா அரிவாளால் வெட்டி அவனைக் கொலை செய்கின்றான். நீதிமன்றத்தில் தூக்கு தண்டனை என்று தீர்ப்பாகின்றது. எவ்வளவு முயன்றும் மேல் கோர்ட்டுக்கு சென்றும் சாகும் வரை என்ற முன்மொழியின்றி சொல்லப்பட்ட தீர்ப்பைப் பிடித்துக் கொண்டு நேசமணி அவர்கள் தீர்ப்பையே மாற்றி எழுத வைக்கின்றார். அவ்வழக்கிலிருந்து தான் "சாகும் வரை தூக்கிலிடப்பட வேண்டும்" என்ற தீர்ப்பு நீதிமன்றங்களில் அரங்கேறுகின்றன.*

*இவ்வாறு வரலாற்றில் பதிவான சமுதாய புரட்சியபளர் திரு.மார்சுல் நேசமணி அவர்கள் பொன்னீலனின் படைப்புகளில் சிறப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளார்.*

**ஐயா வைகுண்டர் பற்றிய பதிவு**

*ஐயா வைகுண்டர் என்றும் நாராயணர் என்றும் அவரது பின்பற்றாளர்களால் அழைக்கப்பட்டு வரும் சமுதாயப் புரட்சியாளர் சமயவாதி தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தோரின் துயர் துடைக்க வந்த கலியுகக் கடவுளாக வழிபடப்படுபவர். அனைத்து சாதியினரும் சமமே என்றும் இறைவனால் படைக்கப்பட்டவர்களே என்றும் போதித்தவர். போதித்ததோடு மட்டுமின்றி சமுதாயப் போராட்டத்தில் இறங்கிப் போராடியவர். புராண பாத்திரங்களின் வரிசையிலும் வரலாற்றுக் குறிப்பிலும் இடம்பெற்றவர். நாராயணருக்கும் லட்சுமி தேவிக்கும் மகனாகத் திருச்செந்தூர் கடலினுள் அவதரித்தவராக அறியப்படுபவர். மும்மூர்த்திகளின் வடிவமாகவும் அனைத்துத் தெய்வ சக்திகளின் ஐக்கியமாகவும் தோன்றியவர் என்று மக்களால் நம்பப்படுபவர். கலியுகத்தில் மக்கள் உறும் அல்லலைத் தீர்க்கும் நோக்கத்தில் இறைவன் எடுத்த அவதாரமாகவும் நம்பப்படுகிறது. ஐயா வைகுண்டரும் பிச்சிப்பு புதினத்தின் ஒரு பாத்திரமாகக் காட்டப்பட்டுள்ளார்.*

**பிச்சிப்பூ நாவலின் பாத்திரமாக ஐயா வைகுண்டர்**

*திருமாலின் அவதாரமாக வணங்கப்படும் ஐயா வைகுண்டர் அவர்கள் பிச்சிப்பு நாவலின் ஒரு பாத்திரமாகக் காட்டப்பட்டுள்ளார். கதைத்தலைவன் மூர்த்தியாரின் இளைய சகோதரரான சின்ன நீலனுக்கு ஏற்பட்ட தீராத நோயின் காரணமாக அவரை ஐயா வைகுண்டர் வாழும் திருப்பதிக்கு அழைத்துச் செல்கின்றனர். அங்கே ஐயாவின் திருவருளால் நோய் குணமாகிறது. நோய் தீர்ந்த பிறகும் ஐயா அவர்களின் சேவை, தெய்வீகத் தொண்டு, தாழ்த்தப்பட்ட இனத்தாராக அடையாளப்பட்டு நிற்கும் பதினெட்டு இனத்தைச் சார்ந்த மக்களைச் சமமாகப் பாவிக்கப் போராடிய தீரம் சின்ன நீலனை அவரோடேயே இருக்கச் செய்கிறது. அவருடைய பொதுவுடைமைத் தத்துவத்தால் ஈர்க்கப்பட்ட சின்ன நீலன் பொதுத்தொண்டில் ஈடுபட்டுப் பொது மக்களுக்கு உதவுகிறார்.*

**ஐயா வைகுண்டர் தெய்வமாதல்**

*ஐயா வைகுண்டரின் இயற்பெயர் முத்துக்குட்டி. தாய் தந்தையோடு வளர்ந்து வரும் முத்துக்குட்டிக்கு 21-ஆம் வயதில் கடும் நோய் தாக்குகின்றது. கனவில் தோன்றி தனது தலத்திற்கு வழிபட வரும்படிக் கட்டளையிட்ட திருச்செந்தூர் முருகனின் வாக்கின்படி முத்துக்குட்டியோடு திருச்செந்தூர் செல்கின்றனர். அங்கே கடலில் நீராடிய முத்துக்குட்டி நீரில் மறைந்து நான்காம் நாள் திரும்பி வருகிறார். தன்னை லட்சுமி தேவியும் நாராயணரும் நல்லுபதேசம் செய்து சென்றதாகவும் அவ்வுபதேசங்களைக் கொண்டு மக்களுக்குச் சேவை செய்ய இருப்பதாகவும் சொல்லிவிட்டு ஐயா அவர்கள் குடும்பத்தைப் பிரிகிறார். ஆறு ஆண்டு காலம் கடுமையாகத் தவமிருந்து ஞானம் பெற்று பிறகு மக்களின் இழிந்த வாழ்வை மேம்படுத்தும் நோக்கில் அவர்களை நல்வழிப்படுத்தியும் மேல் வர்க்க மக்கள் அவர்களைத் துன்புறுத்தும் பொழுது அதனை எதிர்த்தும் சமூக மேம்பாட்டிற்கு வழிவகுத்த சமூகப்போராளியாக அடையாளப்பட்டவரே ஐயா வைகுண்டர்.*

**ஐயா வைகுண்டரின் உபதேசங்கள்**

*பிச்சிப்பூ நாவலின் ஒரு பாத்திரமாகத் திகழும் ஐயா வைகுண்டர் தமது விசுவாசியாக இருக்கும் சின்ன நீலனைத் தனது தொண்டனாக ஏற்றுக் கொண்டு அவருக்கு நல்லுப தேசங்கள் வழங்குகின்றார்.*

*ஐயா வைகுண்டர் தன்னைத் தேடி வரும் மக்களைச் சமமாகப் பாவித்து தமக்கு இணையாக அமரச் செய்வர். உழைகைகும் வர்க்கத்தைச் சார்ந்த பதினெட்டு சாதி மக்களையும் ஒற்றுமையாக வாழ வலியுறுத்தினார்.*

*ஆண்களை வீரத்திற்கு அடையாளமாகத் தலைப்பாகைக் கட்டச் சொல்லியும், பெண்களை உடலை மறைத்து ஆடைகளை அணியவும், அரசாங்க அதிகாரிகள் கேட்கும் வரிகளை எதிர்க்கவும் உரமூட்டினார்.*

**ஐயா வைகுண்டர் எதிர்கொண்ட சிக்கல்கள்**

*சமுதாயத்தில் தாழ்ந்து கிடந்த மக்களை விழிப்படையச் செய்த காரணத்தால் பிரிட்டி'' அரசாங்கமும் திருவிதாங்கூர் ராஜாவும் நம்புதிரிகளும் ஐயா வைகுண்டரை எதிர்த்திருக்கின்றனர். திருவனந்தபுரத்தில் சிறைப்படுத்திக் கடுவாயைப் பல நாட்கள் பட்டினி*

*போட்டு அவரிருந்த சிறையில் அடைத்துள்ளனர். அவருடைய தெய்வீக சக்தியை உணர்ந்த கடுவாய் அவரைத் துன்புறுத்தாமல் அமைதியாகக் கிடந்துள்ளது. இதனைக் கண்டு அதிர்ந்த தலைமை நம்புதிரி ஒரு ஈட்டியை எடுத்து அதன் கைப்பிடியால் இடித்துத் துன்புறுத்துகிறார். கடுவாய் விலங்கு அவ் ஈட்டியைச் சினத்தோடு பிடித்துக் கொண்டு விசையோடு விட ஈட்டியின் கூர்மையான பகுதி நம்புதிரியின் மார்பில் குத்தி அவர் அவ்விடத்திலேயே இறக்கிறார். நம்புதிரிகளின் துர்மரணங்கள் அக்காலத்தில் நாட்டிற்கு ஏற்படவிருக்கும் தீய சகுனம் என்ற நம்பிக்கை திருவிதாங்கூர் மன்னரை அச்சப்படுத்தவே ஐயா வைகுண்டரை விடுதலை செய்ய எண்ணுகிறார். ஆனால் தண்டனைக்காலம் முடியும் வரை அவர் வெளியேயே போகமாட்டேன் என்றும் பதினெட்டு அடிமட்ட சாதி மக்களையும் ஒன்றுபடுத்தியே தீருவேன் என்றும் உறுதியாகக் கூறி மறுத்துவிடுகிறார். தங்களுக்காகப் போராடிய வைகுண்டர் மீது நம்பிக்கையும் மரியாதையும் கொண்ட மக்கள் அவரது வழிகாட்டலைப் பின்பற்றத் தொடங்குகின்றனர்.*

**தொகுப்புரை**

*பொன்னீலனின் பிச்சிப்பு நாவலில் வரலாற்றுச் சிறப்புமிக்க மாந்தர்கள் கதாப்பாத்திரங்களாக வலம் வருகின்றனர்.*

*திரு.மீட் ஐயர் பிரிட்டி" மிசுனரியைச் சார்ந்தவராக இருந்தாலும் தான் பணி செய்ய நியமிக்கப்பட்ட தமிழ்நாட்டில் மக்கள் ஏற்றத்தாழ்வுகளால் துன்புறுவதிலிருந்து கல்விக்கரம் கொடுத்து முன்னேற்றுகிறார்.*

*திரு.மார்சுல் நேசமணி அவர்கள் வழக்கறிஞராகப் பணியேற்ற காலம் தொட்டு நீதிமன்றத்தில் நிலவிய சாதீய ஏற்றத்தாழ்வுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தும் தனது அரசியல் வாழ்வு மூலம் எண்ணற்ற மேம்பட்ட திட்டங்களைச் செயல்படுத்தியும் "குமரி மாவட்டத்தின் தந்தை" எனப் போற்றப்பட்டவர்.*

*நாராயணரின் அவதாரமாகக் கருதப்படும் ஐயா வைகுண்டர் என்ற முத்துக்குட்டி தனது இறைசக்தியின் மூலம் மக்களின் உடல் நோய்களைக் குணப்படுத்தியும் தனது சீர்திருத்தச் செயல்பாடுகளால் சமுதாயத்தின் எண்ண நோய்களைக் குணப்படுத்தியும் உயர்ந்தவர்.*

*எழுத்தாளர் திரு.பொன்னீலன் அவர்கள் இம்மூவர்தம் சமுதாயப்புரட்சியை அவர்கள்தம் வாழ்வியல் பின்னணியோடு பொருத்தமாக அடையாளப்படுத்தியுள்ளார்.*

**துணைநூற் பட்டியல்**


1. *பக்தவத்சல பாரதி, 2016. "பண்பாட்டு மானிடவியல்" மெய்யப்பன் பதிப்பகம்.*
2. *தனஞ்செயன், ஆ. 1996. குலக்குறியியலும் மீனவர் வழக்காறுகளும். பாளையங்கோட்டை: அபிதா பப்ளிகேசுன்ஸ்.*
3. *பக்தவத்சல பாரதி, 2002. தமிழர் மானிடவியல். சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.*
4. *முத்தையா, இ.1996, நாட்டுப்புறச் சடங்குகளும் மனித உறவுகளும். மதுரை: அரசு பதிப்பகம்.*
5. *ஸ்டீபன், ஞா. 1999. பண்பாட்டு வேர்களைத் தேடி. பாளையங்கோட்டை: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுமையம்.*

6. இராமச்சந்திரன், நா.1988. :நாட்டார் கதைகளின் அமைப்பியல் ஆய்வு: "உத்திகளும் நெறிமுறைகளும்". நாட்டார் வழக்காற்றியல்.
7. இராமநாதன், ஆறு.1997. "நாட்டுப்புறஇயல் ஆய்வுகள்". சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
8. சிவசுப்பிரமணியன், ஆ. 1999. "மந்திரங்களும் சடங்குகளும்". சென்னை: மக்கள் வெளியீடு.
9. செயபதி, பிரன்சிஸ். 1999. "பழமைச்சமூகங்களில் தகவல் தொடர்பு". கிறிஸ்டியன் பேட்டை: சோலை இயக்கம்.
10. ஞானசேகரன்,தே. 2000. மந்திரம், சடங்குகள், சமயம். திருச்சிராப்பள்ளி: பார்த்திபன் பதிப்பம்.
11. செல்ல பெருமாள், ஆ. 1988. "உறவுமுறைகளின் அடிப்படை அமைப்பு" நாட்டார் வழக்காற்றியல்.
12. பெனிடிக்ட்,ரூத். 1964."பண்பாட்டுக் கோலங்கள்" சென்னை:தமிழ்வெளியீட்டுக்கழகம்.
13. பஞ்சாங்கம், க. 1994. "பெண்ணெனும் படைப்பு: சில மானுடவியல் குறிப்புகள். புதுச்சேரி: செல்வன் பதிப்பகம்.
14. லூர்து, தே. 1997. நாட்டார் வழக்காற்றியல்: சில அடிப்படைகள். பாளையங்கோட்டை: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுமையம்.
15. பரமசிவன்,தொ. 2001. பண்பாட்டு அசைவுகள். நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.
16. சுந்தர், கா. 1994 "அன்னங்கறி இன்னதிது: சடங்கார்ந்த உணவும் சமூகமும் பற்றிய சில குறிப்புகள்". பரல்கள், பதிப். நாகநந்தினி, இன்னும் பலர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ் ஆய்வாரள் மன்றம்.
17. முத்துக்குமாரசாமி, எம்.டி. 1988. பிற்கால அமைப்பியலும் குறியியலும். பாளையங்கோட்டை: தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி.
18. முத்துமோகன்,ந. 1998. அமைப்பியல் பின் அமைப்பியல். பெங்கர்: காவ்யா பதிப்பகம்.
19. மகேசுவரன், சி.1985. "பச்சைமலை மலையாளிகள்: ஓர் இனவியல் அறிமுகம்". ஆராயசசுசுசி 24
20. பக்தவத்சல பாரதி. 2014. "இலக்கிய மானிடவியல்" அடையாளம் பதிப்பகம்.

## References

1. *Bhakthavathsala Bharathi, 2016. "Panbaatu Maanidaviyal" Meiyappan Publication.*
2. *Dhananjeyan. A. 1996. "Kulakuriyiyalum Meenavar Valakkaarugalum", Palayankottai, Abitha Publications.*
3. *Bhakthavathsala Bharathi, 2002. "Tamilar Maanidaviyal" Meiyappan Publication.*
4. *Muthaiah. I. 1996, "Naatupurasadangugalum Manidha Uravugalum:, Madurai: Arasu Publication.*
5. *Stephen. G, 1999. "Panbaatu Vergalaithedi", Palayankottai, Folklore Research Centre.*
6. *Ramchandran. N, 1988, : Naataar Kadhaigalin Amaipiyal AAivu – Uthigalum Nerimuraigalum", Palayankottai, Folklore Research Centre.*
7. *Ramanathan. Aru. 1997. "Naatupuraviyal Aaivugal", Chennai: Manivasagar Publication.*

8. *Sivasubramaniam. A. 1999, "Mandhirangalum Sadangugalum", Chennai, Makkal Veliyeedu.*
9. *Seyapathi, Francis. 1999, "Pazhamaichamoohangalil Thagaval Thodarbu", Christian Pettai, SolaiIyakkam.*
10. *Gnanasekaran. T. 2000, "Mandhiram, Sadangugal, Samayam", Trichy: Parthiban Publication.*
11. *Sella perumal. A, 1988, "Uravumuraigalin Adippadai Amaippu" Palayankottai, Folklore Research Centre.*
12. *Benedict. Ruth. 1964, "Panbaatu Kolangal" Chennai, Tamil Veliyeetu Kazhagam.*
13. *Panjaangam. K. 1994. "Pennenum Padaippu- Sila Maanidaviyal Kurippugal", Puducherry: Selvan Padhippagam.*
14. *Loordhu. T. 1997. "Naataar Vazhakkatriyal – Sila Adippadaigal" Palayankottai, Folklore Research Centre.*
15. *Paramasivan. T. 2001. "Panbaatu Asaivugal", Kaalasuvadu Padhippagam.*
16. *Sundar. K. 1994, "Annangari Innadhidhu – Sadangaarndha Unavum Samoogamum Patriya Sila Kurippugal" – Paralgal, Madurai Kamarajar University Tamil Research Studies.*
17. *Muthukumaraswamy, M.D, 1988, "Pirkaala Amaipiyalum Kuriyiyalum" Palayangottai, St.Xavier's Autonomous College.*
18. *Muthu Mohan.N. 1998, "Amaippiyal Pin Amaippiayal" Bangalore, Kavya Padhippagam.*
19. *Maheswaran. S. 1985, "Pachaimalai Malaiyaligal – Oar Inaviyal Arimugam" – Aaraaichi 24.*
20. *Bhagthavathsala Bharathi. 2014. "Ilakkiya Maanidaviyal" Adaiyaalam Padhippagam.*